Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    மார்கழி 08    (23 - 12 - 1991)    திங்கட்கிழமை    ஓசை: 308

## தாய், சேய் மரணங்கள் போசாக்கின்மையால் அதிகரிப்பு

### கடந்த வருடம் 538 பேர் உயிர் இழப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் சிறந்த போசாக்கின்மை காரணமாக குழந்தைகள், தாய்மார் ஆகியோர் சுமார் 538 பேர் மரணமடைந்திருக்கின்றனர். அத்துடன் குறைப் பிரசவம் காரணமாக நூற்றுக் கணக்கான குழந்தைகளும் மரணமடைந்திருக்கின்றன. இவ்வாறு நேற்று கொண்டாவில் (4ஆம் பக்கம் பார்க்க)

# இரு மாதங்களுக்குள் யாழ். குடாவை சிங்கள இராணுவம் கைப்பற்றும்!

## முப்படைத் தளகர்த்தா ஹமில்டன் மிரட்டல்

(கொழும்பு)

யாழ்ப்பாண குடாநாட்டை இரண்டு மாதங்களுக்குள் சிங்கள இராணுவம் கைப்பற்றிவிடும் என சிறிலங்காவின் முப்படைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார். யாழ்ப்பாணக் குடாநாடு மீதான முற்றுகை காரணமாக விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்த ஜெனரல் வனசிங்கா இந்த முற்றுகை மேலும் தீவிரப்படுத்தப்படும் என்றார்.

இது இவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை சிறிலங்கா அரசுப் படைகள் நிறுத்த மாட்டாது என்று சிறிலங்கா ஜனாதிபதி நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

மேலும் பேசிய திரு. பிரேமதாசா, வடக்கு, கிழக்குப் பகுதியில் சமாதானத்தையும் ஸ்திரப்பாட்டையும் நிலைநிறுத்துவதில் சிறிலங்கா அரசாங்கம் மிக ஆர்வமாக இருப்பதாகவும், புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டுப் பேச்சுக்கு வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

### ஞாபகார்த்த கூட்டம்

ஆனைக்கோட்டை சிவன் கோயில் முன்றலில் மேஜர் முரளி ஞாபகார்த்த நினைவுக் கூட்டம் இன்று மாலை ஏழு மணிக்கு நடைபெறவுள்ளது.

மேஜர் முரளி விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கப் பொறுப்பாளராகப் பணியாற்றியவராவார். இவரும் இவருடன் மற்றும் மூவரும் வேலணை

## கைதாகிய இளைஞர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்க

### பிரேமதாசாவிற்கு கடிதம்

(கொழும்பு)

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் இளைஞர்கள், குறிப்பாக மலைநாட்டு இளைஞர்கள் விசாரணை எதுவுமின்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல் காலவரையறையின்றி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் பி. சிவசாமி ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதி (3 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் சமரசத் திட்டம்; முஸ். காங்கிரஸிற்குள் முரண்பாடு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு காணும் அமைச்சர் எஸ். தொண்டமானின் திட்டம் குறித்து தன்னிச்சையாக அறிக்கை வெளியிடப்பட்டதற்காக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்புக்கு கட்சிக்குள் எதிர்ப்பு தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் கடந்த ஒக்டோபர் முதலே உள் பூசல் நிலவி வருகிறது. அஷ்ரப் தன்னிச்சையாக தொண்டமானின் திட்டத்தை ஆதரித்ததைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழுக் கூட்டத்தில் அஷ்ரப் வசைத கண்டனத்துக்குள்ளானார் என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அஷ்ரப் விவகாரத்துக்கு சுமுகமான தொரு முடிவு காணும் வகை இப்பிரச்சினை முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழுவுக்குப் பாரப்படுத்தப்படுகின்றது.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, சுற்றுலாத்துறை அமைச்சர் எஸ். தொண்டமானின் திட்டம் குறித்து அஷ்ரப் கடந்த செவ்வாயன்று அறிக்கை வெளியிட்டிருந்தார். சமாதானத் தீர்வுத் (3ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இராணுவ முஸ்தீபு

### விமானத்தாக்குதல் ஆரம்பம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல் நடவடிக்கைகளுக்கான முன்னேற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுக்குளம், கல்மடுவாகுளம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் உலங்கு வானூர்தியொன்று நேற்று

மாவட்டத்தில் இடம் பெற்று வருகின்றன. இதனையடுத்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை தாண்டிக்குளம் அருகே விடுதலைப்புலிகளுடன் மோதல் ஏற்பட்டதாகவும்,

இதனையடுத்து வவுனியா வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப் படுவதாகவும் கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## திருமலையில் மோதல்; 3 இராணுவம் பலி

## வீரச்சாவு

### ஆனந்தன், சபேசன்

ஆனைக்கோட்டை குதியில் நேற்று நடந்த தற்செயலான

## புலிகளுக்கு உதவும் நோக்கம் எனக்கில்லை

- தொண்டமான்

(கொழும்பு)

“ஜெனீவாவில் ஜெனீவாக...

## முதல்வருடநினைவஞ்சலி



பிறப்பு

25-12-1975

!

இறப்பு

23-12-1990

வீரவேங்கை

மித்திரன்

செல்வநாதன் பெனடிற்குமார்

(சண்முகம்)

நீங்காத உன் நினைவுகள், என்றும் தூங்காதே எம் உள்ளங்கள்.
பாங்காய் பணிபுரிந்து, தூங்காதே என்று கூறி.
ஏங்க வைத்து, எமைப் பிரிந்து ஏன் மறைந்தாய்!
வேங்கைப் படை சேர்ந்து, வேமுடன் போராடி,
வீரத்தியாகம் செய்த தீரனைத்தா! நீ நீடூழி வாழ்க!

தமிழீழம் மலர்க!!

'சுபா - ஞானபதி',
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

உமது பிரிவால் துயருறும்,
எட்வேட் செல்வநாதன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திரேசம்மா செல்வநாதன்
(ஆசிரியை)
உற்றோர், மற்றோர்.

(R-2023)

## வரி விளம்பரம்


பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சி விரைவில் ஆரம்பமாகின்றது கடைசித் தவணை க. பொ. த (சா/த) - தேசிக வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம் பே/பா; உயர்கலைக்கல்லூரி 73 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம். (R/2024)

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக கே.கே.எஸ் வீதி) O/L A/L Short hand - Typing இருமொழிகளிலும் Spoken Fnglish I. A B புதிய பிரிவு இன்று) 23-12-91 ஆரம்பம்) (B/3673)


## ஆந்திராவில் கண்ணிவெடி; 15 பேர்பலி

(ஹைதராபாத்)

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்திலுள்ள ஸ்ரீநகரப் பகுதியில் கடந்த வெள்ளிக் கிழமை நிலக்கண்ணி வெடித்ததில் பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 6 பொலிசாரும் இரு தீவிரவாதிகளும் அடங்குவர் நக்சலைட் எனப்படும் இடதுசாரித் தீவிரவாதிகளே இச்சம்பவத்திற்கு பொறுப்பாக இருக்கலாமென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# நினைவு கூருகின்றோம்... 1991-12-23



தயா

மேஜர்

முரளி



1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் திடீர் தாக்குதலில் வீரச்சாவெய்திய

2ஆம்லெப். சகாதேவன் (தர்மலிங்கம் கோகுலநாதன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பு, குருமண்வெளிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம்லெப். கோபு (சபாரத்தினம் - கல்லடி, மட்டக்களப்பு)

2ஆம்லெப். கிருஷ்ணா (தேவசகாயம் - பாலையடிவெட்டை, மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு உரும்பராயில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

மேஜர் முரளி (வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம் - சர்வோதய வீதி, ஆவரங்கால்)

கப்டன் காந்தி (கனகரத்தினம் செல்வகுமார் - 82/4, செல்வகுமார் வீதி, கொழும்புத்துறை)

பஞ்சன் (கணபதிப்பிள்ளை பஞ்சாட்சரலிங்கம் - நீர்வேலி வடக்கு)

நிதி (சிவமனோகரி இராசலிங்கம் - இடைக்காடு, அச்சுவேலி)

அமுதன் (செல்வராசா அமுதன் - 'சுதுமம்' புதிய செம்மணி வீதி, நல்லூர்வடக்கு)

லெப். தர்சினி (ரஞ்சினிதேவி சிவசுப்பிரமணியம் - சேமமடு, ஓமந்தை)

நிகிந்தா (பிறேமலதா பாலசுந்தரம் - சாவகச்சேரி)

சதா (செல்வராணி சிதம்பரப்பிள்ளை - 3ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)

நிர்மலா (டொறின் அஜந்தி அப்புலு - தேவாலய வீதி, சுண்டிக்குழி, யாழ்)

நிரா (விநாயகமூர்த்தி நிராகரன் - கோப்பாய்)

1988 ஆம் ஆண்டு பரந்தன் நாற்சந்தி முகாமிலிருந்து இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

உங்கு|சுதா (காசிநாதன் ஜெயகாந்தன் - கோரக்கன்கட்டு, கிளிநொச்சி)

தேசவிரோதிகளினால் சுட்டுக் கொலைப்பட்ட எமது ஆதரவாளர்

தயா (அருச்சுனன் ஜெபதாசன் - மானிப்பாய்)

கிளிநொச்சியில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட முறிப்புவீதி இ போ ச. உணவுச்சாலை உரிமையாளரான யாழ். சின்னராசா,

1989 ஆம் ஆண்டு உள்ளிச்சைக் காட்டில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய

தீபன் (...)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில்
அன்பின் மலர்வு
03-05-1966

தமிழீழ மண்ணில்
அன்பின் உதிர்வு
23-12-1988

மாவீரன் கப்டன்

வாழ்க!

தமிழீழம் மலர்க!!

'சுபா - ஞானபதி',
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

உமது பிரிவால் துயருறும்,
எட்வேட் செல்வநாதன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திரேசம்மா செல்வநாதன்
(ஆசிரியை)
உற்றோர், மற்றோர்.

(R-2023)

நிலக்கண்ணி வெடித்ததில் பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். ...தில் 6 பொலிசாரும் இரு திரவாதிகளும் அடங்குவர் நக்சலைட் எனப்படும் இடதுசாரித் தீவிரவாதிகளே இச்சம்பவத்திற்கு பொறுப்பாகஇருக்கலாமென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தமிழீழ மண்ணில்
அன்பின் மலர்வு
03-05-1966

தமிழீழ மண்ணில்
அன்பின் உதிர்வு
23-12-1988

## மாவீரன் கப்டன்

## அன்பு (பத்திநாதர் - அமலராஜன்)

ஓ! வீரனே!
நீ சாகவில்லை எங்கள் இதயத்தில் வாழ்கிறாய்!
வீரனாய் மறைந்தாய் மாவீரனாய் மலர்ந்தாய்!
வாடாத மலரே! சூடாத ரோஜாவே!
பூஜைக்குரிய பூமலரே நாம் பூஜிக்கும் மாமலரே!
உனக்கு இனி மரணமே இல்லை
இயக்க மரபைக் காத்தாய்! இறக்கத் துணிந்தாய்!
இறந்தது உன் உடல உயர்ந்தது உன் வீரம்!!
உன் அன்பிற்கு! உன் தியாகத்திற்கு! உன் வீரத்திற்கு!
என்றென்றும் தமிழீழம் நன்றி கூறும்.

ஓ! எம் இனிய அன்பு வீரனே!! மாவீரனே!!!
உமக்கு எங்கள் அஞ்சலிகள் அர்ப்பணம்!

பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

சவரிஓடை
மயிலிட்டி

பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

(B/3678)

2ஆம்லெப். ...
கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

1986ஆம் ஆண்டு மட்டக்களப்பு, குருமண்வெளிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

2ஆம்லெப். கோபு (சபாரத்தினம் - கல்லடி, மட்டக்களப்பு)
2ஆம்லெப்.கிருஷ்ணா (தேவசகாயம் - பாலையடிவெட்டை, மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு உரும்பராயில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பில் வீரச்சாவெய்திய

மேஜர் முரளி (வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம் - சர்வோதய வீதி, ஆவரங்கால்)
கப்டன் காந்தி (கனகரத்தினம் செல்வகுமார் - 82/4, செல்லகுமார் வீதி, கொழும்புத்துறை)
மஞ்சன் (கணபதிப்பிள்ளை பஞ்சாட்சரலிங்கம் - நீர்வேலி வடக்கு)
நிதி (சிவமனோகரி இராசலிங்கம் - இடைக்காடு, அச்சுவேலி)
அமுதன் (செல்வராசா அமுதன் - 'அமுதம்' புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு)
லெப். தர்சினி (நஞ்சினிதேவி சிவசுப்பிரமணியம் - சேமமடு, ஓமந்தை)
நிகிந்தா (பிறேமலதா பாலசுந்தரம் - சாவகச்சேரி)
சதா (செல்வராணி சிதம்பரப்பிள்ளை - 3ஆம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)
நிர்மலா (டொமினிக் அஜந்தி அன்ஜலா - தேவாலய வீதி, சுண்டுக்குழி, யாழ்)
நிரா (விநாயகமூர்த்தி நிராகரன் - கோப்பாய்)

1988ஆம் ஆண்டு பரந்தன் நாற்சந்தி அடி பாலத்தில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

உங்கு/சுதா (காசிநாதன் ஜெயகாந்தன் - கோரக்கன்கட்டு, கிளிநொச்சி)

சேவிபோராதிகளினால் சுட்டுக் கொலைப்பட்ட எமது ஆதரவாளர்
தயா (அருச்சுனன் ஜெபதாசன் - மானிப்பாய்)

கிளிநொச்சியில் தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட முறிப்புவீதி இ.போ.ச. உணவுச்சாலை உரிமையாளரான யாழ்.சங்கானைவாசி,

1989ஆம் ஆண்டு உன்னிச்சைக் காட்டில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய
நிபன் (அம்பாறை)

1990ஆம் ஆண்டு மயிலம்பாவெளி, 13ஆம் கிராமத்தில் ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த
விஜி (காரைதீவு, அம்பாறை)
றிச்சாட் (காரைதீவு, அம்பாறை)
கதிர் (காரைதீவு, அம்பாறை)
மூர்த்தி (இருதயபுரம், மட்டக்களப்பு)

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய
லெப். ராஜன் (சிவஞானசுந்தரம், குகதாசன் - மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு)
ஜெறோம் (தர்மராசா சசிக்குமார் - மருத்துவமனை வீதி, சங்கானை)
மித்திரன் (செல்வநாதன் வெடிக்குமார் - பிடாரிகோயிலடி, ஆனைக்கோட்டை)

அம்பாறை 16ஆம் கொலனியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய
மூகிலன் (வீரமுனை, அம்பாறை)

மட்டக்களப்பு, மண்டூர்ப் பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த
அரசன் (ஆலையடிவேம்பு, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3676) விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

